திரு. கே. சகாதேவக் கண்டர் : தலைவர் அவர்களே, இந்த களி மண்ணால் பொம்மைகள் செய்யப்படுகின்றன. இன்னும் சில இடங்களில் இப்படிப்பட்ட மண் இருப்பதாகத் தெரிகிறது. அப்படிப்பட்ட இடங்களிலும் இப்படிப்பட்ட தொழிற்சாலைகளை ஆரம்பிக்க அரசு ஆவனசெய்ய முன்வருமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நாம் அமைத்திருப்பது டிரெயினிங்-கம்-புரடக்ஷன் சென்டர். இதிலே பயிற்சி கொடுக்கப்படுகிறது. வேறு எங்காவது தொடங்கலாம் என்று யாராவது முன் வந்தால் அவர்களுக்கு உதவி செய்யலாம்.

மாமல்லபுரம் அரசினர் சிற்பக்கலைப் பயிற்சிப் பிரிவு

***301 வினா—திரு. என். சங்கரய்யா :** மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாமல்லபுரத்திலுள்ள அரசினர் சிற்பக்கலைப் பயிற்சி நிலைய மாணவர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் மாத உதவித் தொகையை ரூ. 60-5-75 என்ற விகிதத்திற்கு உயர்த்தும் செயற்குறிப்பு ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) இப்பள்ளியில் படித்துத் தேறுகின்றவர்களுக்கு தேவஸ்தானங்களில் சிற்பிகளாக பணிபுரியும் வேலைவாய்ப்புக் கிடைக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா ?

(உ) செங்கல் கலைக் கட்டடத்துறையிலும், சுதையிலிருந்து பிம்பங்கள் செய்யும் துறையிலும் இம்மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) மாத உதவித் தொகையை ரூ. 60 ஆக எல்லா மாணவர்களுக்கும் உயர்த்தும் செயற்குறிப்பு அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளது.

(இ) ஆம்.

(உ) ஆம்.

வேலூர் தாலுக்கா, சதுப்பேரி குளத்திற்கு வரும் கால்வாயைத் தூர் எடுத்தல்

***302 வினா—திரு. மா. பா. சாரதி :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு, வேலூர் தாலுக்காவில் இருக்கும் சதுப்பேரிக்கு மழைக் காலத்தில் பாலாற்று நீரைக் கொண்டு வரும் கால்வாயை மராமத்து செய்யும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

(இ) ஆம் எனில், எப்பொழுது ?

1970 மார்ச் 10]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) வட ஆற்காடு மாவட்டத்தில் வேலூர் தாலுக்காவில் சதுப்பேரி குளத்திலும், சதுப்பேரி குளத்திற்கு வரும் கால்வாயிலும் தூர் எடுப்பதற்காக பஞ்ச நிவாரணத் திட்டத்தின் கீழ் ரூ. 27,300-க்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு வேலைகள் முடிவடைந்து விட்டன.

அணைக்கட்டுகள்

*303 வினா—திரு. பி. ஜெயராமன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வட ஆர்க்காடு மாவட்டம் பேரணம்பட்டு தொகுதி பத்தரபளளி, மோர்தானா இரண்டு அணைக கட்ட அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பத்தரப்பள்ளி கிராமத்தின் அருகில் மலட்டாற்றின் குறுக்கே ஒன்றும், மோர்தானா கிராமத்தின் அருகில் கௌண்டிய நதியின் குறுக்கே மற்றொன்றும் ஆக இரு நீர்த் தேக்கங்கள் அமைப்பதற்கான திட்டங்கள் ஏற்கனவே பரிசீலிக்கப்பட்டன.

இவ்விரு திட்டங்களை எடுத்துக் கொள்ளுவது பாலாறு வடிநிலத்தின் நீரியல் அமைப்பினை நன்றாக ஆய்வு செய்து முடிக்கும் வரையில் தள்ளிவைக்கப்பட்டுள்ளது.

திரு. பி. ஜெயராமன் : தலைவர் அவர்களே, பேரணம்பட்டுத் தொகுதியில் பத்திரபள்ளி, மோர்தானா என்ற இரண்டு அணைகளைக் கட்டுவதாக காமராஜர் குடியாத்தத்திலே தேர்தலில் நின்ற நேரத்திலே அப்பொழுதே மக்களுக்குச் சொன்னதால் மக்கள் பேரார்வம் கொண்டு நம்முடைய தொகுதியிலே காமராஜர் வந்து அணைகட்டுகிறார் என்று ஆசையோடு இருந்தார்கள். அது நடைபெறவில்லை. நம்முடைய ஆட்சியிலே அணை கட்டுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்கள். அந்த மக்களுடைய எண்ணத்தை நிறைவேற்ற அரசு துரிதமாக அந்த அணைக்கட்டுகளைக் கட்டிமுடிப்பதற்கு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அவர் சொல்லிவிட்டுப் போய்விட்டார். நாம் இப்பொழுது அதற்கு நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், சட்டப்படி 2 ஏக்கருக்கு ஒரு டன் நெல் உற்பத்தியாகிறது என்று சொன்னால் அதற்கு 3 ஆயிரம் ரூபாய் என்ற அடிப்படையிலே அணை கட்டவேண்டும். ஆனால் இந்த இன்வெஸ்டிகேஷன் நடத்திய அடிப்படையைப் பார்க்கக்கூடிய நேரத்திலே 1,500 ரூபாய்க்கு அடங்குகிறது. அப்படியிருந்தும், 4 ஆயிரம், 10 ஆயிரம் ரூபாய் அளவிலே டாம்களைக்